# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

### அசத்தியது சேலம்

அன்பார்ந்த தோழர்களே,

மே மாதம் 10ஆம் தேதி நடைபெற உள்ள 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலுக்கான பிரச்சார பொதுக் கூட்டம் மார்ச் 21ஆம் தேதி மாலை சேலம் தொலைபேசியக வளாகத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில உதவி செயலாளரும் சேலம் மாவட்ட தலைவருமான தோழர் S.தமிழ் மணி தலைமையில் பிரமாண்டமாக நடைபெற்றது. சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களை சார்ந்த 400க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்ற இந்த சிறப்புக் கூட்டத்தில் கலந்துக் கொண்ட அனைவரையும் சேலம் மாவட்ட BSNL ஊழியர் சங்கத்தின் செயலாளர் தோழர் E.கோபால் வரவேற்றார்.

இந்த பிரமாண்டமான தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தர்மபுரி மாவட்ட BSNL ஊழியர் சங்க செயலாளர் தோழர் P.கிருஷ்ணன், மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா மற்றும் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

தோழர் P.அபிமன்யு தனது சிறப்புரையில் BSNL ஊழியர் சங்கம் அங்கீகரிக்கப்பட்ட இந்த 12 ஆண்டு காலத்தில் ஊழியர்கள் பெற்ற சிறப்பான பொருளாதார பயன்களையும், மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைகளையும், அதன் காரணமாக BSNL நிறுவனம் நலிவடைந்ததையும், இந்த நிறுவனத்தை பாதுகாக்க BSNL ஊழியர் சங்கம் மேற்கொண்ட கடுமையான முயற்சிகளையும் எடுத்துரைத்தார். 01.01.2017 முதல் நடைபெற உள்ள ஊதிய மாற்றத்தில் முதன்மை சங்கமான BSNL ஊழியர் சங்கம் சிறப்பான ஊதிய மாற்றத்தையும், ஊழியர்களுக்கு நிர்வாகம் மறுத்துள்ள நியாயமான உரிமைகளையும் நிச்சயம் பெற்றுத் தரும் என்பதை உறுதியுடன் எடுத்துரைத்தார்.

இந்த நிறுவனத்தை பாதுகாக்கவும், ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய உயர் ஊதியம் உள்ளிட்ட அனைத்து சலுகைகளையும் பெற்றுத்தர உள்ள BSNL ஊழியர் சங்கத்திற்கு வரும் சங்க அங்கீகார தேர்தலில் பெரும் வெற்றியை சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்கள் பெற்றுத்தரும் என்கிற உறுதியை எடுத்துக் காட்டும் வகையில் நடைபெற்ற இந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தினை BSNLஊழியர் சங்கத்தின் சேலம் மாவட்ட உதவி செயலாளர் தோழர் S.ஹரிஹரன் நன்றி கூறி முடித்து வைத்தார். இந்தக் கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில அமைப்பு செயலாளர் தோழர் M.பாபு அவர்களும் ஒப்பந்த ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் மற்றும் மாநில சங்க நிர்வாகிகள் மற்றும் AIBDPA சங்கத்தை சார்ந்த தோழர்களும் கலந்துக் கொண்டனர்.

இந்த பிரமாண்டமான கூட்டத்தை ஏற்பாடு செய்த சேலம் மற்றும் தர்மபுரி மாவட்ட சங்கங்களை தமிழ் மாநில சங்கம் மனதார வாழ்த்துகிறது.


BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்
9
BSNLEU


BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்
9
BSNLEU


BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்
9
BSNLEU
BSNLEU


BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்
9


9


BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்
9
செல்போன்
BSNLEU


9






SEWA BSNL, BSNL MS,
9


9